# பெப்ரவரி - 06 - திங்கள்

## புனித கொன்சாலோ மார்சியா

## ‘என் உயிரே ஆண்டவரைப் போற்றிடு’’ (தி.பா.104:1)

---

**முதல் வாசகம்: தொடக்க நூல் 1:1- 19**

தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும், மண்ணுலகையும் படைத்தபொழுது, மண்ணுலகு உருவற்று வெறுமையாக இருந்தது. ஆழத்தின் மீது இருள் பரவியிருந்தது. நீர்த்திரளின்மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்தது. அப்பொழுது கடவுள், ”ஒளி தோன்றுக!” என்றார் ஒளி தோன்றிற்று. கடவுள் ஒளி நல்லது என்று கண்டார்.கடவுள் ஒளியையும் இருளையும் வெவ்வேறாகப் பிரித்தார்.கடவுள் ஒளிக்குப் பகல் என்றும் இருளுக்கு இரவு என்றும் பெயரிட்டார். மாலையும் காலையும் நிறைவுற்று முதல் நாள் முடிந்தது.அப்பொழுது கடவுள், ”நீர்த்திரளுக்கு இடையில், வானம் தோன்றுக! அது நீரினின்று நீரைப் பிரிக்கட்டும்” என்றார்.கடவுள் வானத்தை உருவாக்கி வானத்திற்குக் கீழுள்ள நீரையும் வானத்திற்கு மேலுள்ள நீரையும் பிரித்தார். அது அவ்வாறே ஆயிற்று.கடவுள் வானத்திற்கு ”விண்ணுலகம் என்று பெயரிட்டார். மாலையும் காலையும் நிறைவுற்று இரண்டாம் நாள் முடிந்தது.அப்பொழுது கடவுள், ”விண்ணுலகுக்குக் கீழுள்ள நீர் எல்லாம் ஓரிடத்தில் ஒன்றுசேர உலர்ந்த தரை தோன்றுக!” என்றார். அது அவ்வாறே ஆயிற்று. கடவுள் உலர்ந்த தரைக்கு நிலம் என்றும் ஒன்றுதிரண்ட நீருக்குக் கடல் என்றும் பெயரிட்டார். கடவுள் அது நல்லது என்று கண்டார்.அப்பொழுது கடவுள், ”புற்பூண்டுகளையும் விதை தரும் செடிகளையும், கனி தரும் பழமரங்களையும் அந்த அந்த இனத்தின்படியே நிலம் விளைவிக்கட்டும்” என்றார். அது அவ்வாறே ஆயிற்று. புற் பூண்டுகளையும் விதையைப் பிறப்பிக்கும் செடிகளையும் கனிதரும் மரங்களையும் அந்த அந்த இனத்தின்படி நிலம் விளைவித்தது. கடவுள் அது நல்லது என்று கண்டார்.மாலையும், காலையும் நிறைவுற்று மூன்றாம் நாள் முடிந்தது.அப்பொழுது கடவுள், ”பகலையும் இரவையும் வெவ்வேறாகப் பிரிப்பதற்கும் காலங்கள், நாள்கள், ஆண்டுகள் ஆகியவற்றைக் குறிப்பதற்கும் விண் விரிவினில் ஒளிப்பிழம்புகள் தோன்றுக! அவை மண்ணுலகிற்கு ஒளிதர விண்விரிவினில் ஒளிப்பிழம்புகளாக இருக்கட்டும்” என்றார். அது அவ்வாறே ஆயிற்று.கடவுள் இருபெரும் ஒளிப்பிழம்புகளை உருவாக்கினார். பகலை ஆள்வதற்குப் பெரிய ஒளிப் பிழம்பையும், இரவை ஆள்வதற்குச் சிறிய ஒளிப்பிழம்பையும் மற்றும் விண் மீன்களையும் அவர் உருவாக்கினார். கடவுள் மண்ணுலகிற்கு ஒளிதர விண்ணுலக வானத்தில் அவற்றை அமைத்தார். பகலையும் இரவையும் ஆள்வதற்கும் ஒளியையும் இருளையும் வெவ்வேறாகப் பிரிப்பதற்கும் அவற்றை அமைத்தார். கடவுள் அது நல்லது என்று கண்டார்.மாலையும் காலையும் நிறைவுற்று நான்காம் நாள் முடிந்தது.

**பதில்பாடல்:** ஆண்டவர் தம் செயல்களைக் குறித்து மகிழ்வாராக

**நற்செய்தி: மாற்கு 6: 53 - 56**

அக்காலத்தில் இயேசுவும் சீடர்களும் படகேறி மறு கரைக்குச் சென்று கெனசரேத்துப் பகுதியை அடைந்து படகைக் கட்டி நிறுத்தினார்கள். அவர்கள் படகைவிட்டு இறங்கிய உடனே, மக்கள் இயேசுவை இன்னார் என்று கண்டுணர்ந்து, அச்சுற்றுப் பகுதி எங்கும் ஓடிச்சென்று, அவர் இருப்பதாகக் கேள்விப்பட்ட இடங்களுக் கெல்லாம் நோயாளர்களைப் படுக்கையில் கொண்டு வரத் தொடங்கினார்கள்.மேலும் அவர் சென்ற ஊர்கள், நகர்கள், பட்டிகள் அனைத்திலும் உடல் நலம் குன்றியோரைப் பொதுவிடங்களில் கிடத்தி, அவருடைய மேலுடையின் ஓரத்தையாவது அவர்கள் தொட அனுமதிக்குமாறு அவரை வேண்டினார்கள். அவரைத் தொட்ட அனைவரும் நலமடைந்தனர்.

**தியானம்:** கடவுளின் அன்பின் பரிணாமத்தையும் அவரது சர்வ வல்லமையையும் இன்றைய வாசகங்கள் தெளிவுபடுத்தி அவரது அன்பில் நிலைத்திருக்க எம்மை அழைத்து நிற்கின்றது. முதல் வாசகம் உலகின் படைப்பைப்பற்றி கூறுகின்றது. உருவமற்றதை உருவாக்குவதையும், வெறுமையானவற்றை நிறைவாக்குவதிலும் படைப்பின் முழுமை தங்கியிருக்கின்றது. இது வல்லமையுள்ள கடவுள் ஒருவரால்தான் முடியும். அவருடைய வல்லமையும் மாட்சிமையும் நிறைந்து விளங்கியது. எனத் திருப்பாடல்கள் கூறுகின்றது. அவ்வாறே நற்செய்தியில் இறைமகன் இயேசு கடவுளின் அன்பை வெளிப்படுத்தியதன் பிரதிபலிப்பை, அவரைத் தேடி மக்கள் எல்லா இடங்களிலும் இருந்து வந்தது காட்டுகின்றது. “அவரைத் தொட்டவர்கள் எல்லோரும் நலமடைந்தார்கள்’’ என்பது நாம் நற்செய்தியில் பார்க்கின்றோம். எனவேதான் இயேசு மக்கள் மத்தியில் பிரபல்யமாயிருக்கின்றார். அவரது அன்பும், குணமளிக்கும் வல்லமையும் மக்களை அவரிடம் கூட்டி வந்தது. நம்பிக்கையோடு அவரைத் தேடிவந்த அனைவரும் அவர்களது தேவைகளைப் பெற்றார்கள். குறிப்பாக மக்களிடையே காணப்பட்ட நம்பிக்கையே அவர்கள் குணமடைவதற்கு மருந்தாக அமைந்துது. எமது வாழ்விலும் நம்பிக்கையின் ஒளியைப் பெற்றுக் கொள்வோம். துன்பமோ, துயரமோ எது நடந்தாலும் எல்லாம் இறைவன் செயல் என்பதைப் புரிந்து தெளிந்த மனதுடன் வாழ்வோம். நமது தேவைகளில் நம்பிக்கையோடு ஆண்டவரிடம் கேட்போம். அவர் ஒருபோதும் கைவிடமாட்டார்.